கந்தகத் திணை

# குழந்தைப் பாக்கள்

மின் – நூல்

03



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்கு இணையம் வழித் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)

**சிவகாசி - 626 189**

மற்றும்

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**சிவகாசி - 626 124**

## இணைந்து உருவாக்கும்

## மின்-நூல் (E-book)

# கந்தகத் திணை

## (புதியதோர் உலகம் செய்வோம்)

(2015 - 2016)

# குழந்தைப் பாக்கள் - 3

தமிழ்த்துறை மாணவர் குழாம்

## கூட்டாஞ்சோற்றின் குரல்

அனுமானின் வால்போல நீளும் உறவுகளால் கட்டப்பட்ட தமிழன் வீடு – உலகமே போற்றிடும் பொதுமறையாம் திருக்குறள் – வானின் ஓசோன் படலம் காக்கும் துளசி – காணக்காணக் கற்பனை தரும் நிலா – ஆயிரம் முறை கேட்டாலும் புளித்துப் போகாத நிலாக் கதைகள் – சுட்டெரிக்கும் கோடையிலும் சுகமாய் மனிதனைக் காத்திடும் பனைமரம் – குழந்தைகளை நெறிப்படுத்தும் பாப்பா பாடல் – குழந்தைகளைக் குதூகலிக்க வைக்கும் பொம்மை எனக் குழந்தைப் பாடல்கள் கவிதைப் பாவனையோடு புனையப் பெற்றுள்ளன. எம் மாணவர்கள் குழந்தை இலக்கியக் கூட்டாஞ்சோறு படைத்துள்ளனர். கூடி உண்ண வாரீர்... 'பாப்பா பாக்கள்' மின்–நூலாய் ஆக்கம் பெற வழிகோலிய கல்லூரி நிர்வாகத்தாருக்கு இதயம் கனிந்த நன்றி.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphic ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
ஒருங்கிணைப்பாளர், கந்தகத்திணை.

# பொருளடக்கம்



| வ. எண். | படைப்பு | படைப்பாளர்பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 01 | தமிழன் வீடு | த. விஜயலட்சுமி | 01 |
| 02 | திருக்குறள் | இரா. அன்னலட்சுமி | 02 |
| 03 | துளசி | ப. கணேஷ்வரி | 03 |
| 04 | நிலா | R. சண்முகப்பிரியா | 04 |
| 05 | நிலாக்கதைகள் | சௌ. ஸ்டெல்லாபுஷ்பா | 05 |
| 06 | பனைமரம் | த. விஜயலட்சுமி | 06 |
| 07 | பாப்பாபாடல் | மா. பொற்கொடி | 07 |
| 08 | பொம்மை | மா. பொற்கொடி | 08 |

# தமிழன் வீடு



அன்புக்கு அம்மா
அறிவுக்கு அப்பா
அழைத்துச் செல்ல அண்ணன்
ஆறுதல் சொல்ல அக்கா
ஆசைக்குத் தங்கை
தத்தி விளையாடத் தம்பி
கதை சொல்லப் பாட்டி
கட்டுப்பாடு சொல்லத் தாத்தா
பெருமை கூறும் பெரியப்பா
பேரறிவு புகட்டும் பெரியம்மா
சிரித்துப் பேசச் சித்தப்பா
சிங்காரம் செய்யச் சித்தி
அரவணைக்கும் அத்தை
ஆற்றுப்படுத்தும் மாமா
ஒன்றாய் வாழும் வீடு
அதுவே தமிழன் வீடு

த. விஜயலட்சுமி,
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்).

# திருக்குறள்



திருக்குறளாம்... திருக்குறள்...
ஐயன் வள்ளுவனின் திருக்குறள்!
இரண்டடிப் பாடலாம்
இரண்டாயிரம் ஆண்டுப் பழமையாம்!
எல்லோரும் படிக்கலாம்
எல்லாமொழியிலும் படிக்கலாம!
'அ' வில் தொடங்குமாம்...
'ன' வில் முடியுமாம்...!
பத்துப் பத்துப் பாடலாய்
அதிகாரமும் அமையுமாம்
ஆக மொத்தம் பார்க்கவே
ஆயிரத்து முந்நூற்று முப்பதாம்
நட்புபற்றிக் கூறுமாம்
அட... கூடாநட்பும் பேசுமாம்!
மன்னரையும் கூறுமாம்
அட... நம் உழவனையும் பேசுமாம்!
கடவுளையும் கூறுமாம்!
அட... உலகப் பொதுமறையும் ஆகுமாம்
திருக்குறளைப் படித்திடலாம்!
வள்ளுவன் வழி நடந்திடலாம்!!
வையம் போற்ற வாழ்ந்திடலாம்!!!

இரா. அன்னலட்சுமி,
முனைவர்பட்ட ஆய்வாளர் (தமிழ்).

# துளசி



வா மகளே வா...! - நீ
வா மகளே வா...!
துளசிச்செடி பார்க்கலாம்
துள்ளிக் குதித்து மகிழலாம்

கோயிலுக்குச் செல்லலாம்
கோவிந்தனைப் பார்க்கலாம்
செப்பு நல்ல குடத்திலே
துளசித் தீர்த்தம் குடிக்கலாம் - (வா மகளே வா)

காட்டிற்குச் செல்லலாம்
கருந்துளசி பார்க்கலாம்
கடும் இருமலையும் போக்கலாம்
களிப்புடனே வாழலாம்! - (வா மகளே வா)



பறக்கும் விமானம் ஏறலாம்
பறவையாகத் திரியலாம்
பச்சைப் பசிய துளசியும்
படர்ந்த ஓசோனைக் காக்குமாம்! - (வா மகளே வா)


செல்ல நாயைக் கூட்டியே
சேர்ந்துடனே செல்லலாம்
செந்துளசி காட்டியே
சேர்ந்து பறித்து உண்ணலாம் - (வா மகளே வா)

மூன்று பேரும் கூடியே - வீட்டு
முற்றம் செல்லலாம்
மூலிகைத் துளசிவாசம் தான்
மூக்கடைப்பைப் போக்குமாம் - (வா மகளே வா)

துளசியோடு வாழ்ந்திடலாம்
தூயகாற்றைப் பெற்றிடலாம்
நலமாய் நாமும் வாழவே
வளமாய்த் துளசி வளர்த்திடலாம்... (வா மகளே வா)

ப. கணேஷ்வரி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்).

# நிலா



அதோ பார் நிலா
அம்புலி தானே நிலா
அலைந்து திரியும் நிலா
அம்புலி தானே நிலா
அமாவாசை விழா - அட
பௌர்ணமியில் உலா
பூமியைச் சுற்றும் நிலா - அட
புனிதமான நிலா
சூரியனையும் பூமியையும்
எதிர்த்திசையில் நோக்கும் நிலா - அட
அமாவாசை நிலா
சூரியனின் ஒளி எடுத்துப்
பூமி எதிரில் நிலா - அட
பௌர்ணமி உலா
பதினைந்து நாள் வளரும் நிலா
பதினைந்து நாள் தேயும் நிலா
திங்கள் என்னும் பெயர்கொண்ட
திகட்டாத தோசை வடிவ நிலா



சு. சண்முகப்பிரியா,
முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு.

# நிலாக் கதைகள்



அதோ அதோ போகுது
நிலா நிலா போகுது
மேகம் என்னும் தேரில் ஏறி
வேகமாகப் போகுது
நட்சத்திரங்கள் அணிவகுக்க
நிலாராணி போகுது

வெள்ளைநிறப் பந்துபோல
உருண்டு உருண்டு போகுது
தம்பிகளே தங்கைகளே
நிலா கூடப் போகலாம்
கொஞ்சம் முயற்சி செய்தால்
நிலாவுக்கே போகலாம்

நிலாவில் ஒரு பாட்டி
உலாவுவதாய்ச் சொல்வாங்க
கட்டுக்கதை கேட்காதீங்க
காரணத்தைக் கேளுங்க
நிலவிலுள்ள கறைகளெல்லாம்
நிலவின் மலைமேகங்களாம்
தம்பிகளே தங்கைகளே
நிலாக் கதைகள் கேளுங்க



நிலவைப் பாம்பு விழுங்குமாம்
விழுங்கி விழுங்கித் துப்புமாம்
கட்டுக்கதை கேட்காதீங்க
காரணத்தைக் கேளுங்க
பாம்பும் இல்லை பல்லியும் இல்லை
ராகு கேது கோள்களாம்
தம்பிகளே தங்கைகளே
நிலாக் கதைகள் கேளுங்க



நாமும் நல்லாப் படிக்கலாம்
நல்ல காரணத்தை அறியலாம்
நீல் ஆம்ஸ்ட்ராங் போலவே
நிலவில் காலை வைக்கலாம்
தம்பிகளே தங்கைகளே
நிலாக் கதைகள் கேளுங்க.

செள. ஸ்டெல்லா புஷ்பா,
ஆய்வு உதவியாளர் (தமிழ்).

# பனைமரம்

வறண்டநிலத் தாவரமாவேன்!
தமிழர் அடையாளச் சின்னமாவேன்
சேரன் சூடிய பூவுமாவேன்
தமிழன் மடலேறிய கருக்குமாவேன்!
உண்ண நுங்கு தந்திடுவேன்
பருகிடப் பதனி கொடுத்திடுவேன்
இனிப்புக்குக் கருப்பட்டி அளித்திடுவேன்
விளையாட வண்டி வழங்கிடுவேன்!
சுவரின் மேல் கூரை ஆகிடுவேன்
குழந்தை கையில் காத்தாடி ஆவேன்
தம்பி கேளு பாப்பா பாரு
பனைமரம் தான் என் பேரு!



த. விஜயலட்சுமி,
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்)

* * *

# பாப்பா பாடல்



பாப்பா பாப்பா நீ பாடு
அழகுத் தமிழில் கவி பாடு

கண்ணே பாப்பா நீ ஆடு
அழகு மயிலாய் அசைந்தாடு



பாப்பா பாப்பா நீ சொல்லு
பழகுத் தமிழில் கதை சொல்லு

கண்ணே பாப்பா நீ ஓடு
கடிகாரம் போலே விரைந்து ஓடு



பாப்பா பாப்பா நீ வா! வா!
அன்பாய் முத்தம் தாதா

கண்ணே பாப்பா நீ ஓடி வா
இனிய தமிழில் பாடிவா...!

மா. பொற்கொடி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்).

* * *


# பொம்மை

சின்னச் சின்ன பொம்மை
சிங்காரப் பொம்மை



கன்னங் குழி சிரிப்பில்
தலையாட்டும் பொம்மை

குட்டிப் பாப்பா கையில்
கைதட்டும் பொம்மை



குட்டிக் கரணம் போடும்
வாய் பேசாதப் பொம்மை

பொம்மை பொம்மை பொம்மை
பாப்பா விரும்பும் பொம்மை



கண்ணைச் சிமிட்டும் பொம்மை
கண்சிமிட்டும் நேரத்திலே
பறக்கும் விமான பொம்மை...!

மா. பொற்கொடி,
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்).

* * *


நன்றி